1990 மார்ச் 29]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : இந்தப் பதில் எந்த அமைச்சரிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பட்டா வருவாய்த்துறை அமைச்சர் கொடுக்க வேண்டியது; கேள்வி பொதுப்பணித்துறை அமைச்சருக்குச் சம்பந்தப்பட்டது என்றால் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டு வருவாய்த்துறை அமைச்சரிடமிருந்து பதிலைப் பெறலாம்.

திண்டுக்கல்லில் தோல் தொழிற்பேட்டை.

*551—திரு. ஏ. எஸ். தங்கராஜன் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம், திண்டுக்கல்லில் மத்திய திட்டத்தின் கீழ் ரூபாய் 200 கோடியில் ஆரம்பிக்கப்படுவதாக இருந்த தோல் மற்றும் தோல் பொருள் உற்பத்தி தொழிற்சாலையின் (லெதர் காம்ப்ளக்ஸ்) தற்போதைய நிலை என்ன ?

(ஆ) அதனை நிறைவேற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு மத்திய அரசால் துவக்கப்பட்ட சிறப்புப் பணிக்குழு (Task Force) தோல் தொழிற்பேட்டை ஒன்றினை ஆரம்பிப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்ய பல்வேறு இடங்களை ஆய்வு செய்து ஒரு அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறது. ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதேயொழிய, இந்தத் திட்டத்திற்கான நிதியை மத்திய அரசோ, மாநில அரசோ இதுவரை ஒதுக்கவில்லை. திண்டுக்கல் பகுதியில் ஒரு தோல் வளர்ச்சி நிறுவனத்தை உருவாக்க வேண்டுமென்று தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகம் அதற்கான பணியை தற்போது தான் மேற்கொண்டு இருக்கிறது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு கலந்து பேசி இந்தத் தொழிற்பேட்டை அமைவதற்கான இடம் தேர்வு செய்கின்ற முயற்சி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பண்டிட் ஜவஹர்லால் நேரு பாரதப் பிரதமராக இருந்தபோது அவர் தலைமையில் நியமிக்கப்பட்ட முதலாவது திட்டக் குழு தென்னகத்தில் குறிப்பாக திண்டுக்கல் பகுதியில் 200 கோடி ரூபாயில் தோல் பதனிடும் தொழில், தோல் பொருள் உற்பத்தி செய்வதற்கு 200 கோடி ரூபாயில் ஒரு பெருமளவிலான திட்டம் ஆரம்பிப்பதற்கு திட்டக் குழு ஏற்றுக் கொண்டது. அதன் அடிப்படையில் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு ஆய்வு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அமைச்சர் அவர்களின் பதிலையொட்டி மேலும் தமிழக அரசு இப்போது பெரும் தொழிலை நடத்துவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் பகுதியில் பள்ளப்பட்டி என்ற இடத்தில் 121 ஏக்கர் நிலம் இதற்காக தேர்வு செய்யப்பட்டபோது திண்டுக்கல்லில் ஏற்கெனவே நிலவிக்கொண்டிருக்கிற குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தை இதுவரை அமல்படுத்துவதற்கு முன்வரவில்லை. இந்தத் தொழிற்பேட்டை அமைக்கப்படுமேயானால் தினம் ஒன்றுக்கு 2 இலட்சம் முதல் 3 இலட்சம் காலன் தண்ணீர் இந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும். எனவேதான் குடிதண்ணீர் பற்றாக்குறையைக் கருத்திலே கொண்டு இந்தத் தொழிலை அந்தப் பகுதியிலே தொடங்குவதற்குப் பணிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இப்பொழுது தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் பள்ளப்பட்டிக்கு அருகில் குடிநீர் வசதி இருக்கக்கூடிய நிலக்கோட்டை தாலூக்காவில் ஏதாவதொரு இடத்தைத் தேர்வு செய்து அந்தயிடத்தில் இந்தத் தொழிலை அமைக்க முடியுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

10-05 மணி.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோல் ஏற்றுமதி வர்த்தகம் நமது நாட்டில் 4,000 கோடி ரூபாய்க்கு அந்நியச் செலவாணியைத் தேடித் தருகிறது. நமது மாநிலத்தில் தமிழகம் 3,000 கோடி ரூபாயை ஈட்டுகிறது. மிகப்பெருமளவிற்குத் தமிழகத்தில் தோல் ஏற்றுமதி செய்கின்ற காரணத்தினால் கால்நடை வளர்ப்பு, தோல் பதனிடும் தொழில் செய்யப்படுவதற்கு, வண்ணத் தோல் உற்பத்தி செய்வதற்கு, தோல் பொருள் உற்பத்தி செய்வதற்கு

[1990 மார்ச் 29]

ஒரு நல்ல வாய்ப்பும் வசதியும் இருப்பதனாலும் ஏராளமான உழைப்பாளி மக்களுக்கு வேலை கிடைக்கின்ற வாய்ப்பு இருப்பதனாலும், திட்டக் குழுவே இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு இருப்பதனாலும். . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேகமாக, கொஞ்சம் சுறுசுறுப்பாக கேள்வி கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : ஆகவே, இந்த மாபெரும் திட்டத்தை தமிழக அரசு துரிதப்படுத்தி முடிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : அரசு இதைப் பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. விரைவில் அப்படிப்பட்ட ஒரு தொழில் அமைப்பதற்கு அரசு முன்வரும். இந்தத் துறையிலே ஏற்கெனவே சில தனியார் நிறுவனங்கள் நல்ல முறையில் தங்கள் தொழிற்கூடங்களை அமைத்து, தோல் பொருள்கள் ஏராளமாக ஏற்றுமதி ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே அரசின் மூலமாகத்தான் இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நிலையில் இன்றைக்கு நாம் இல்லை. இந்தத் துறையில் ஈடுபட வருகின்ற தனியார் தொழில் அதிபர்களுக்கு மற்றும் மின்னணு தொழில்களை மேற்கொள்ள வருகிற சிறு தொழில் அதிபர்களுக்கு ஏற்கெனவே அரசு 20 சதவிகித மானியம் வழங்கும் என்று ஏற்கெனவே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அரசு இத் திட்டம் பற்றியும் பரிசீலிக்கும்.

இண்டி தொழிற்பேட்டையில் மேலும் தொழிற்கூடங்கள் கட்டுதல்.

*8158— திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சைதை தொகுதியிலுள்ள கிண்டி தொழிற்பேட்டையில் மேலும் தொழிற்கூடங்கள் கட்டப்படும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?